**<u>O.S.No. 334/2007</u>**

**<u>PW1 : புவனேஷ்வரி</u>** தேதி 31.10.2025

**<u>வாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 8 மற்றும் 9 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நானும் என் கணவர் ராஜாராமும் சேர்ந்து ராஜி தங்கம் டெக்ஸ்டைல் மற்றும் பிராசசிங் என்ற யுனிட்டை நடத்தி வந்தோம் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் ராஜி தங்கம் டெக்ஸ்டைல் மற்றும் பிராசசிங் நிறுவனத்தின் ஆர்.சி சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.**1. நான், என் கணவர் மற்றும் அவருடைய சகோதரர்கள் சேர்ந்து நடத்தி வந்தார்கள் என்றால் 1995 ல் ராஜி தங்கம் டெக்ஸ்டைல் மற்றும் பிராசசிங் என்ற பெயரை மாற்றி ராஜி தங்கம் டெக்ஸ்டைல் லிமிடெட் என்ற பெயரில் நடத்தி வந்தார்கள். அப்போது சிட்டி யூனியன் வங்கியில் கடன் வாங்கியிருந்தார்கள். அந்த கடனை கேட்டு சிட்டி யூனியன் வங்கி வழக்கு தாக்கல் செய்து என்றால் சரிதான். 8 மற்றும் 9 பிரதிவாதிகள் என்னுடைய மகள்கள். அவர்கள் ஈரோடு நீதிமன்றத்தில் அ.வ.எண் 628/98 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் சரிதான். அந்த வழக்கு அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால் சரிதான். அதன் பேரில் EP தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த EP மனுவில் சுவாதீனம் கொடுக்க இருநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.2.** அதன் படி சுவாதீனம் கொடுக்கபட்டுவிட்டது என்றால் சரிதான். நீதிமன்ற அமீனா கைகாட்டி சுவாதீனம் கொடுத்தார். சுவாதீனம் ரசீது **பி.வா.சா.ஆ.3.** பேக்டரியில் இருந்த சாமான்களை விற்றுவிட்டார்கள். அதற்கான அறிவிப்பு **பி.வா.சா.ஆ.**4. நீதிமன்ற ஆணையர் நான் உரிமையாளர் என்பதால் எனக்கு அறிவிப்பு அனுப்பி இருந்தார். அது **பி.வா.சா.ஆ.**5. மேற்படி தொழிலை நடத்துவதற்கு Sales tax

அலுவலகத்தில் எங்களுக்கு அனுமதி கொடுத்திருந்தார்கள். மேற்படி தொழில் நடப்பதற்கான பில்கள் **பி.வா.சா.ஆ.**6. மேற்படி ஆவணங்களில் கோபாலகிருஷ்ணன் MD என்ற முறையில் கையெழுத்திட்டுள்ளார். மேல்முறையீடு செய்யப்பட்டதற்கான ஆவணம் **பி.வா.சா.ஆ.**7. 8 மற்றும் 9 பிரதிவாதிகள் என்னை இடைஞ்சல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அவர்களை வேண்டுமென்றே இவ்வழக்கில் சேர்த்துவிட்டேன் என்றால் சரியல்ல.